ආයතනයේ නම - ජාතික විගණන කාර්යාලය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

நிறுவனத்தின் பெயர் - தேசிய கணக்காய்வு அலுவலகம்

நிலையியற் கட்டளை இல. 119(4) இன் பிரகாரம் பாராளுமன்றத்தின் பொதுக் கணக்குகள் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக நிறுவனங்களுக்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Name of the Institution – National Audit Office

Submission of observation of the Hon. Minster in charge of the Institution and the steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts of the Parliament in terms of Standing Order No 119 (4)

மாதிரி இல.01

நாடாளுமன்றத் தொடர் இல. - 290

நிறுவனத்தின் பெயர் - தேசிய கணக்காய்வு அலுவலகம்

குழுவால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்		குறைபாடுகள்/ தற்போதைய நிலையை சீர்செய்வதற்கு நிறுவனத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
முதலாவது பகுதி		
(அ)	2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட செலவினப் பிரிவைச் சேர்ந்த வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பாக பரீட்சிப்பு நடாத்தப்பட்டிருக்கவில்லை.	மீளாய்வாண்டில் நாட்டில் நிலவிய பொருளாதார நிலைமையின் அடிப்படையில் QR முறைமையின் கீழ் எரிபொருள் வழங்கல் மற்றும் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் எரிபொருள் நுகர்வு தொடர்பான பரீட்சிப்பை மேற்கொள்வது கடினமாக இருந்தது. எனினும், சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
(ஆ)	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையாக உள்ள கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	ஓய்வூதியப் பணிக்கொடையை பெற்றுக்கொள்வதில் உள்ள தாமதம் காரணமாக உத்தியோகத்தர் ஒருவரிடம் இருந்து நிலுவையாக உள்ள கடன் மீதி அறவிடப்பட வேண்டியுள்ளது, மேலும் ஓய்வூதியப் பணிக்கொடை செலுத்தப்படும் போது அத்தகைய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடப்படும் நிலுவையாக உள்ள கடன் மீதி தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய மேலதிக நடவடிக்கை சட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட உள்ளது. மீதமுள்ள கடன் மீதியை தவணை முறையில் மீளச் செலுத்துவதற்கு உத்தியோகத்தர் இணங்கியுள்ளார், தற்போது அது தவணை முறையில் அறவிடப்படுகிறது.
இரண்டாம் பகுதி		
(அ)	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களில் இருந்து வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களின் எண்ணிக்கை 50% இற்கும் குறைவாக உள்ளது.	2021 ஆம் ஆண்டில் கொவிட் 19 தொற்றுநோய்க்குப் பிந்தைய தொற்றுநோய் நிலைமை மற்றும் நாட்டில் நிலவிய போக்குவரத்து சிக்கல்கள் காரணமாக, சுகாதாரத் துறையின் பரிந்துரைகள் மற்றும் ஏனைய மட்டுப்படுத்தப்பட்ட காரணிகளுக்கு உட்பட்டு நாங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்ததால் நாடு முழுவதும்

பரந்திருக்கும் உத்தியோகத்தர்களை அழைப்பதன் மூலம் பயிற்சி அமர்வுகளை நடாத்த இயலாமை அதற்கு அடிப்படைக் காரணமாகும். நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக மாத்திரமே அத்தியாவசிய பயிற்சி அமர்வுகள் உரிய காலத்தில் நடாத்தப்பட்டிருந்தன.

(ஆ) செயலாற்றல் உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு, ஒட்டுமொத்த பதவியணியினரையும் உள்ளடக்கி ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2019 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 30(i) ஆம் ஏற்பாடுகளின் பிரகாரம் "இலங்கை அரச கணக்காய்வு சேவையை" உருவாக்குவதற்காக கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழுவை இரத்து செய்தல் போன்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட உண்மைகள் காரணமாக சேவைப் பிரமாணக் குறிப்பை தயாரிக்காததன் காரணமாக மீளாய்வாண்டில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பதவியணியினருக்கான செயலாற்றல் உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. எனினும், அரச கணக்காய்வு சேவையை உருவாக்குவது தொடர்பான நடவடிக்கைகள் 2024 சனவரியில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம்; செயலாற்றல் உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு, அரச கணக்காய்வு சேவைக்கு உத்தியோகத்தர்களை உள்வாங்குவதன் மூலம் கைச்சாத்திடப்படுகின்றன.

(இ) அனைத்து உத்தியோகத்தர்களாலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்திய பின்னர் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனப்படுத்தலை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன, மேலும் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு பிரகடனப்படுத்தலை சமர்ப்பிக்க வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களிடமிருந்தும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பிரகடனப்படுத்தல்களை சேகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஒப்பம்./டபிள்யு. பீ. சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

டபிள்யூ.பீ.சீ.விக்கிரமரத்ன
கணாக்காய்வாளர் தலைமை அதிபதி